# நல்ல எறும்பு



மயிலை சிவமுத்து

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நல்ல எறும்பு



மாணவர் மன்ற வெளியீடு - 1980

உரிமை மன்றத்தினுடையது.

விலை ரூ. 1—50

மாணவர் மன்ற அச்சகம்,
41, இப்ராகிம் தெரு, சென்னை - 600001.

# நல்ல எறும்பு

## 1

ஓர் ஊரில் ஒரு சிறு எறும்பு இருந்தது. அது மிகவும் நல்ல எறும்பு. குழந்தைகளைக் கண்டால் அதற்கு மிகவும் ஆசை. குழந்தை அழுதால் அது அங்கே போய் விளையாடும். அப்போது அந்தக் குழந்தை அழாமல் வேடிக்கை பார்க்கும்.

பள்ளிக்கூடம் போகும் சிறுவர்களைக் கண்டாலும் அந்த எறும்புக்கு மிகவும் விருப்பம். ஆனால், அவர்கள் தப்பிதம் செய்தால் அதற்குக் கோபம் வரும். அது அப்போது அவர்களைக் கடிப்பதும் உண்டு.

அந்த எறும்பு ஒரு சிறுவன் வீட்டுக்குச் சென்றது. அவன் பெயர் கோவிந்தன். அவன் நன்றாகப் பல் துலக்குவதில்லை;

தினந்தோறும் குளிப்பதும் இல்லை. அவன் ஆடைகளும் அழுக்காகவே இருக்கும். ஆதலால், அந்த எறும்புக்குக் கோவிந்தன்மீது கோபம் அதிகம். அவன் ஒரு நாள் இரவு சிறிது கற்கண்டு தின்றான். பிறகு அவன் வாய் கழுவாமலே படுத்துக்கொண்டான்.



எல்லாரும் தூங்கும்போது அந்த எறும்பு மெதுவாகக் கோவிந்தன் அருகே சென்றது. பிறகு அது அவன் வாயை 'வெடுக்' கென்று கடித்தது. அப்போது கோவிந்தன் 'ஓ' என்று கூவி அழுதான். அந்த எறும்பு உடனே எங்கேயோ ஓடிப் போய்விட்டது.

## 2

நல்ல பிள்ளைகளை அந்த எறும்பு ஒரு நாளும் கடிப்பது இல்லை. கோவிந்தன் வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு வீடு இருந்தது. அது கோபாலன் வீடு. அவன் மிகவும்



நல்லவன்; தாய் தந்தையர் சொற்படி நடப்பான்; பாடசாலைக்கு ஒழுங்காகப் போவான்; பாடங்களையும் நன்றாகப் படிப்பான். ஆதலால், அந்த எறும்பு அவனைக்

கடிப்பதே இல்லை. கோபாலன் எப்போதும் அதிகாலையில் எழுந்து பல் துலக்குவான்; பிறகு படிக்க ஆரம்பிப்பான். அப்போது அந்தச் சிறு எறும்பு அவன் பக்கத்தில் இருந்து அவன் படிப்பதைக் கேட்டுக் கொண்டே இருக்கும்.

கோபாலன் தம்பியின் பெயர் கோதண்டன். அவன் வீட்டில் படிப்பதே இல்லை. தாய் தந்தையர் சொல்லைச் சிறிதும் கேட்பதில்லை; தன் அண்ணனுக்கும் அடங்கி நடப்பதில்லை. ஆதலால், அவன்மீது அந்த எறும்புக்குக் கோபம் அதிகம். ஆனல், அது அவனை அப்போது கடிக்கவில்லை; ஏன் என்ருல் 'அவன் பள்ளியிலாவது படிக்கின்ருனு?' என்று அது கவனிக்க விரும்பிற்று.

'எறும்பு எப்படிப் பள்ளிக்கூடம் போகும்?' என்று நீங்கள் கேட்கலாம். அதையும் சொல்லுகிறேன்; கோதண்டன் தன் சட்டைகளைப் பெட்டியில் பத்திரமாய்

வைப்பதில்லை. அவைகளை, அவன் நினைத்த இடத்தில் கழற்றிப் போட்டு விடுவான்.



அந்த எறும்பு அதிகாலையில் எழுந்து, அவன் சட்டைப் பையில் புகுந்து கொண்டது.

3

கோதண்டன் பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டான். அந்த எறும்பும் அவனோடு போயிற்று. அவன் தெருவிலே போகும் போது பத்துக் காசுக்கு வேர்க்கடலை வாங்கினான். அதை அவன் வழி முழுவதும் தின்று கொண்டே சென்றான். பிறகு அவன் பாட

சாலைக்கு அருகே வந்ததும் மிருந்ததைத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். தின்பண்டங்களைப் பள்ளிக்குள் கொண்டு போகக் கூடாது அல்லவா? ஆதலால், அந்த எறும்புக்குக் கோபம் அதிகமாகவே இருந்தது.

கோதண்டன் பாடசாலைக்குச் சென்றான். அங்கே அவன் சில பிள்ளைகளோடு சண்டை செய்தான்; பிள்ளைகள் உட்காரும் பலகையின்மேல் ஏறிக் குதித்தான். பள்ளிக் கூடத்துச் சுவரில் ஏதேதோ கிறுக்கினான்; ஏழைப் பிள்ளைகளைக் கேலி செய்தான். இவைகளை எல்லாம் அந்தச் சிறு எறும்பு அவன் சட்டைப் பையிலிருந்து, மெதுவாகப் பார்த்துக்கொண்டே இருந்தது.

## 4

மணி அடித்ததும் பிள்ளைகள் எல்லாரும் தம்தம் வகுப்பிலே போய் உட்கார்ந்தார்கள். கோதண்டனும் தன் வகுப்பை

அடைந்தான். ஆனால், அவன் ஆசிரியர் சொல்வதைக் கவனிக்கவே இல்லை. அவன் தன் புத்தகத்தை முகத்துக்கு நேராக மூடிக் கொண்டான். மெதுவாக அடுத்தப் பையனோடு பேசிக்கொண்டே இருந்தான். பிறகு



அவனை ஆசிரியர் சில கேள்விகள் கேட்டார். அப்போது அவன் பனைமரம் போல் நின்றான்; ஆந்தை போல் விழித்தான். ஆதலால், ஆசிரியர் அவனை பெஞ்சியின் மேல் நிற்க வைத்தார். அந்தச் சிறு

எறும்பும் எல்லாவற்றையும் அப்போது கவனித்துக் கொண்டேதான் இருந்தது.

பெஞ்சியின்மேல் ஏறி நிற்கும்போது கோதண்டன் வருந்தவில்லை. அவமானம் என்றும் எண்ணவில்லை. அவன் அவ்வாறு நின்று கொண்டே ஆசிரியருக்குத் தெரி



யாமல் பக்கத்துச் சிறுவன் காதைப் பிடித்துக் கிள்ளினுன்; அச்சிறுவனுடைய தலையின்மேல் ஒரு சிறு காகிதத்தைக் கிழித்து வைத்தான்; பிறகு முகத்தைப் புத்தகத்தால் மூடிக்கொண்டு சிரித்தான்; குரங்கு போல் கூத்தாடினுன். அப்போது ஆசிரியர் அவனைப் பார்த்தார். அவன் பூனைபோல் பேசாமல் இருந்தான். அவன் சட்டைப் பையில் ஒளிந்திருந்த எறும்பு அப்போதும் அவனை ஒன்றும் செய்யவில்லை.

5

சிறிது நேரம் கழிந்தது; ஆசிரியர் கரும்பலகையில் ஏதோ எழுதிக் கொண்டு இருந்தார். அப்போது கோதண்டன், அவர் எழுதுவதைக் கவனிக்கவே இல்லை. தன்னிடம் இருந்த வேர்க்கடலையில் சிறிது எடுத்துத் தின்பதற்காக அவன் மெதுவாகத் தன் சட்டைப் பையில் கையை விட்டான். உடனே அந்த எறும்பு மிக்க கோபத்துடன் அவன் கையை நன்ருகக் கடித்து

விட்டது. அப்போது அவன் 'அப்பா - அம்மா,' என்று கத்திக் கொண்டே கையைப் பார்த்தான். அவன் சுட்டு விரலில் அந்த எறும்பு கடித்துக்கொண்டு இருந்தது. அந்த



எறும்பைக் கண்டதும் கோதண்டன் மிகவும் கோபம் கொண்டான். அதனை அவன் அப்போதே கொன்றுவிட எண்ணினான். ஆனால் அது எப்படியோ தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் விட்டது.


சிறிது நேரத்திற்குள் அந்த எறும்பு அவ் வகுப்பு முழுவதும் சுற்றி வந்தது. அப்போது ஒரு சிறுவன் காலை ஆட்டிக் கொண்டு இருந்தான். அன்றியும் அவன் பாடத்தைச் சிறிதும் கவனிக்கவே இல்லை. ஆதலால் அந்த எறும்பு அவனையும் 'வெடுக்' கென்று கடித்துவிட்டு வேகமாய் ஓடிப்போய் விட்டது.

## 6

பிறகு அவ்வெறும்பு அடுத்த வகுப்பை அடைந்தது. கோவிந்தன் அந்த வகுப்பிலே தான் வாசிக்கிறான். ஆதலால் அந்த எறும்பு அவனைப் பார்த்துச் செல்லவே அங்கு வந்தது. அது வகுப்புக்குள் நுழைந்து சிறிது தூரம் சென்றது. அங்கே ஒருவன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்; மற்றொருவன் வேறு வேலை செய்து கொண்டு இருந்தான்; வேறு ஒருவன் அடுத்த சிறுவனோடு பேசிக்கொண்டு இருந்தான். இவர்களை எல்லாம் அந்த எறும்பு

கடித்துக் கொண்டே சென்றது. ஆனால் அது ஒருவர் கையிலும் அகப்படவே இல்லை.

அந்த எறும்பு பலரையும் இவ்விதம் கவனித்துக் கொண்டு அவ்வகுப்பைச் சுற்றி வந்தது. ஆனால் கோவிந்தனைக் கண்டு



பிடிக்க அவ்வெறும்பால் முடியவே இல்லை. முடிவில் அது ஆசிரியருக்கு அருகே வந்தது. அங்கே, அந்த ஆசிரியருக்குச் சிறிது தூரத்திலே, ஒரு சிறுவன் பாடத்தைக்

கவனியாமல் நல்ல தூக்கத்தில் இருந்தான். "அவன் யார்?" என்று நீங்கள் கேட்பீர்கள் அல்லவா? அவன்தான் கோவிந்தன். அவனைக் கண்ட அந்த எறும்புக்கு எவ்வளவு கோபம் இருக்கும்! நீங்களே சொல்லுங்கள். ஆதலால் அவ்வெறும்பு மிக்க கோபத்தோடு



அவன் காலைக் கடிக்க ஆரம்பித்தது. அவன் நல்ல உறக்கத்தில் இருந்ததால் அது அவனுக்கு உறைக்கவில்லை. அதனால் அந்த எறும்பு மறுபடியும் கோபத்தோடு கடித்தது. அப்போதும் அவன் கண் திறந்து பார்க்காமல் தன் தலையைச்

சொறிந்து கொண்டே தூங்க ஆரம்பித்தான். பாவம்! அந்த எறும்பு வேறு என்ன செய்யும்? அது சிறிது நேரம் அசைவற்று இருந்தது; பிறகு, ஏதேதோ எண்ணிக் கொண்டு அவன் அருகே போவதும் வருவது மாய் இருந்தது. முடிவில் அது அச்சிறுவ னுக்குப் பின்புறமாகச் சுவரின்மீது வேகமாக ஏறி, அவன் முதுகில் மெதுவாக வந்து, சிறிது நேரம் யோசித்தது. பிறகு அவ் வெறும்பு, வளைபோல் ஆழமாக இருந்த அவன் காதிற்குள் விரைந்து சென்று குடைய ஆரம்பித்தது.

அவ்வெறும்பு காதில் நுழைந்தவுடனே அவனுக்குத் தூக்கம் பறந்து போயிற்று. அவன், 'ஆ! ஊ!' என்று உறுமிக் கொண்டு கண்ணைப் பிசைந்தான்; "ஓ! என்னவோ காதில் குடைகிறதே - குடை கிறதே!" என்று கத்திக்கொண்டு காதில் விரல் விட்டுத் துழாவினான்; தன் இடத்தை விட்டு அங்கும் இங்கும் ஓடினான்.

கோவிந்தன் இட்ட கூச்சலால் ஆசிரியர் தும் பாடத்தை நிறுத்திவிட்டார். பிள்ளை களில் சிலர் தம் இடத்தை விட்டு எழுந்து அவன் அருகே சென்றனர்; ஆனால் அவர்



களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அந்த எறும்போ கோவிந்தனுடைய காதைக் குடைந்து கொண்டே இருந்தது. கோவிந் தன் அழுதுகொண்டே ஆசிரியரிடம் சென்று

தன் துன்பத்தைக் கூறினன். அப்போது ஒரு சிறுவன் வேகமாய் வெளியே சென்று தன் கையில் சிறிது நீரைக் கொண்டு வந்து கோவிந்தன் காதில் வார்த்தான்; பிறகு தலையைச் சாய்க்கும்படி கூறினன். இவ் விதம் அவன் இருமுறை செய்தான். அப்போது கோவிந்தன் துன்பம் நீங்கியது. தூக்கமும் ஒழிந்தது. அந்த எறும்பு அவ்வகுப்பை விட்டு வேறு வகுப்புக்குச் சென்றது.

## 7

கோபாலன் அந்த வகுப்பிலேதான் வாசிக்கிருன். அவன் மிகவும் நல்ல சிறுவன் அல்லவா? ஆதலால் அவனைப் பார்ப்பதற்கே அந்த எறும்பு அங்கே சென்றது. அப்போது அவன் கோதண்டனைப்போல் குறும்பு செய்து கொண்டும் இல்லை; கோவிந்தனைப்போல் தூங்கிக் கொண்டும் இல்லை. அவன் கண்கள் இரண்டும் ஆசிரியரையே பார்த்துக் கொண்டிருந்தன; காதுகள்

இரண்டும் ஆசிரியர் சொல்வதையே கேட்டுக் கொண்டு இருந்தன. அவன் சில பிள்ளை களைப் போல் முகத்தைப் புத்தகத்தால் மறைத்துக் கொள்ளவில்லை; பலகையின்



மேல் சாய்ந்து கொண்டேனும், கவிழ்ந்து கொண்டேனும் உட்கார்ந்து இருக்க வில்லை; ஆசிரியர் கேட்ட கேள்விக்கெல் லாம் கோபாலன் சிறிதும் தயங்காமல் பதில் சொல்லிக்கொண்டு வந்தான்.

அந்த எறும்புக்கு அப்போது கோபாலன்மீது மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனல், அந்தச் சிறிய எறும்பு அதை எப்படி அவனுக்குத் தெரிவிக்கும்? அவனிடம் பேசவும் அதனல் முடியாது; ஏதேனும் வெகுமதி கொடுக்கவும் அதனிடத்தில் பணம் இல்லை அல்லவா? ஆதலால் அது தனக்குள் எண்ணி எண்ணிச் சந்தோஷப்பட்டது.

பிறகு அது அவ்வகுப்பு முழுவதும் சுற்றிக்கொண்டே வந்தது. சோம்பேறிப் பிள்ளைகளும், தூங்கு மூஞ்சிப் பிள்ளைகளும் சிலர் அங்கு இருந்தனர்; அந்த எறும்பு அவர்களையெல்லாம் தக்கபடி தண்டித்துக் கொண்டே சென்றது.

## 8

இவ்விதம் அந்த எறும்பு செல்லும் போது பகல் ஒரு மணி ஆயிற்று. ஆதலால், "டாங்கு - டாங்கு," என்று சாப்

பாட்டு மணி கேட்டது. அப்போது பிள்ளை கள் தங்கள் பலகை புத்தகங்களை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராக இருந்தனர். மணி ஓசையைக் கேட்டதும் எறும்புக்கும் பசி எடுத்தது. அதற்குப் பாடசாலையிலே சாப்பாடு எப்படிக் கிடைக்கும்? அப்போது அவ்வகுப்பை விட்டு வெளியே செல்லவும் அச்சிறு எறும்பால் சிறிதும் முடியாது. பிள்ளைகள் அதைத் தங்கள் கால்களால் மிதித்து நசுக்கி விடுவார்கள் அல்லவா? ஆதலால் அது அருகே இருந்த ஒரு சிறுவன் புத்தகத்தின் மேல் உட்கார்ந்து கொண்டது. அச்சிறுவன், தன் பலகை புத்தகங்களைத் தலையின்மேல் வைத்துக் கொண்டு சாப் பிடும் இடத்திற்குச் சென்றான். அந்த எறும் பும் மிக்க மகிழ்ச்சியோடு அப் புத்தகத் தின்மேல் ஏறிக்கொண்டு சென்றது.

அச் சிறுவன் சாப்பிடும் இடத்தை அடைந்தான். அங்கே அநேக சிறுவர்கள் உணவு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். கோபாலன், கோதண்டன், கோவிந்தன்

அந்த எறும்புக்கு அப்போது கோபாலன்மீது மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால், அந்தச் சிறிய எறும்பு அதை எப்படி அவனுக்குத் தெரிவிக்கும்? அவனிடம் பேசவும் அதனால் முடியாது; ஏதேனும் வெகுமதி கொடுக்கவும் அதனிடத்தில் பணம் இல்லை அல்லவா? ஆதலால் அது தனக்குள் எண்ணி எண்ணிச் சந்தோஷப்பட்டது.

பிறகு அது அவ்வகுப்பு முழுவதும் சுற்றிக்கொண்டே வந்தது. சோம்பேறிப் பிள்ளைகளும், தூங்கு மூஞ்சிப் பிள்ளைகளும் சிலர் அங்கு இருந்தனர்; அந்த எறும்பு அவர்களை யெல்லாம் தக்கபடி தண்டித்துக் கொண்டே சென்றது.

## 8

இவ்விதம் அந்த எறும்பு செல்லும் போது பகல் ஒரு மணி ஆயிற்று. ஆதலால், "டாங்கு - டாங்கு," என்று சாப்

பாட்டு மணி கேட்டது. அப்போது பிள்ளை கள் தங்கள் பலகை புத்தகங்களை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராக இருந்தனர். மணி ஓசையைக் கேட்டதும் எறும்புக்கும் பசி எடுத்தது. அதற்குப் பாடசாலையிலே சாப்பாடு எப்படிக் கிடைக்கும்? அப்போது அவ்வகுப்பை விட்டு வெளியே செல்லவும் அச்சிறு எறும்பால் சிறிதும் முடியாது. பிள்ளைகள் அதைத் தங்கள் கால்களால் மிதித்து நசுக்கி விடுவார்கள் அல்லவா? ஆதலால் அது அருகே இருந்த ஒரு சிறுவன் புத்தகத்தின் மேல் உட்கார்ந்து கொண்டது. அச்சிறுவன், தன் பலகை புத்தகங்களைத் தலையின்மேல் வைத்துக் கொண்டு சாப் பிடும் இடத்திற்குச் சென்றான். அந்த எறும் பும் மிக்க மகிழ்ச்சியோடு அப் புத்தகத் தின்மேல் ஏறிக்கொண்டு சென்றது.

அச் சிறுவன் சாப்பிடும் இடத்தை அடைந்தான். அங்கே அநேக சிறுவர்கள் உணவு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். கோபாலன், கோதண்டன், கோவிந்தன்



முதலியோரும் அங்கே சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். அந்த எறும்பு அச்சிறுவன் புத்தகத்தை விட்டு இறங்கிக் கோபாலன் அருகே சென்றது. அவன் தரையிலே ஒரு சாதமும் சிந்தவேயில்லை. கோதண்டனும்,



கோவிந்தனும் நாலா பக்கமும் சோற்றினை இறைத்து வைத்திருந்தார்கள். அன்றியும் அவர்கள் பெருங்குரல் எடுத்துப் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தார்கள்.


௭

அந்த எறும்பு அங்கே சென்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே தரையில் சிந்திக் கிடந்த சோற்றைத் தின்ன

விரும்பிற்று. அது அவ்விதம் செல்லும் போது கோபாலன் மணையின் கீழே ஒரு தேள் ஒளிந்திருந்தது. அதை அவ்வெறும்பு எப்படியோ பார்த்து விட்டது - ஆ! அந்தத் தேள் கோபாலனைக் கொடுக்கினுல் கொட்டி விடும் அல்லவா? ஆதலால் அந்த நல்ல எறும்பு மிகவும் வருந்தியது. பிறகு ஏதோ சிறிது யோசித்தது. முடிவில் அது கோதண்டனுக்கு அருகே சென்று அவன் பார்க்கும்படி அவன் இலையின் மேலே ஏறியது. அப்போது கோதண்டன் மிக்க கோபத்தோடு அதைப் பிடித்துக் கொன்று விட எண்ணினுன். ஆனுல் அது, அவன் கையில் அகப்படாமல் வளைந்து வளைந்து ஓடிற்று.

அப்போது கோவிந்தனும், " அடே, கோதண்டா, அதை விடாதே; கொன்று விடு," என்ருன். ஆதலால், கோதண்டன், தான் சாப்பிடுவதை விட்டு எழுந்தான். அந்த எறும்போ அவனுக்கு ஆட்டங் காட் டிக் கொண்டே தேள் இருக்கும் இடத்தில்

நுழைந்தது. நல்ல காலம்! கோதண்டன் அங்கே தன் கையை விடாமல் குனிந்து பார்த்தான். உடனே அவன், "தேள்! தேள்!!" என்று கத்தினான். அப்போது



எல்லோரும் சாப்பிடுவதை விட்டு எழுந்து கொண்டார்கள். உடனே ஒரு வேலைக் காரன் ஓடிவந்து அந்தத் தேளைக் கொன்று போட்டு விட்டான்.

பிறகு கோதண்டன் அந்த எறும்பைக் கவனிக்கவே யில்லை. அதுவே கோபால னைக் காப்பாற்றியது என்பதும் அவனுக்குத் தெரியாது; கோபாலனுக்கும் தெரியாது.

பிறகு அந்த எறும்பு, தரையில் கிடந்த சோற்றை வயிறு நிரம்பத் தின்று தண்ணீரும் குடித்தது.

10

சிறிது நேரம் சென்றதும் பள்ளிக்கூட மணி அடித்தது. பிள்ளைகள் எல்லோரும் தங்கள் தங்கள் வகுப்புக்குச் சென்றார்கள். அந்த எறும்பு மறுபடியும் பள்ளிக்கூடம் போக விரும்பவில்லை. அதற்குத் தன் வீட்டின் மீதே எண்ணம் இருந்தது. "இப்போது அது எப்படி வீட்டுக்குப் போகும்?', என்று நீங்கள் கேட்பீர்கள். அந்த எறும்பு அதைத்தான் முதலில் யோசித்தது. ஆனால் அது மிகவும் புத்திசாலி. ஆதலால், அந்த எறும்பு அப்போதே சென்று கோபாலன் சாப்பாட்டுப் பாத்திரம் ஒன்றில் ஒளிந்து கொண்டது.

பிள்ளைகள் சென்றதும், சாப்பாட்டுக் காரி, அந்தச் சாமான்களை எடுத்துக் கூடையில் வைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அந்த எறும்பு மகிழ்ச்சியோடு வீடு போய்ச் சேர்ந்தது.



அது வீட்டுக்குச் சென்றதும் அச் சாமானை விட்டுக் கீழே இறங்கித் தன் இடத்தை அடைந்தது. அதற்கு நண்பர் பலர் உண்டு. அவைகளும் எறும்புகளே. அவைகளிடம் அது, அன்று செய்த வேலைகளையெல்லாம் சொல்லி மகிழ்ந்தது. அதைக் கேட்டு அவைகளும் மகிழ்ச்சி அடைந்தன. பிறகு அவைகளில் ஓர் எறும்பு, "கெட்ட பிள்ளைகளை நாமும் கடிக்க வேண்டும்," என்றது. அதற்கு எல்லா எறும்புகளும், "ஆம்! ஆம்!" என்று, தலையை அசைத்தன. ஆசிரியர் சொல்வதைக் கேட்காத பிள்ளைகளையும், தாய் தந்தையர்களுக்கு அடங்காத பிள்ளைகளையும், அன்று முதல் எல்லா எறும்புகளும் கடிக்க ஆரம்பித்தன.

# நல்ல எறும்பு

இன்பம் உள்ள எறும்பே,
எங்கள் கட்டிக் கரும்பே,
துன்பம் ஒன்றும் புரியோம்;
தின்ப தற்கும் தருவோம். 1

காலை தன்னில் எழுவோம்;
கடவுள் பாதம் தொழுவோம்;
நூலைக் கற்போம் சீராய்;
நுண்ணெ றும்பே வாராய். 2

தந்தை சொல்லைத் தள்ளோம்;
தாயின் சொல்லும் எள்ளோம்;
சுந்த ரச்சிற் றெறும்பே,
செய்வ தில்லை குறும்பே. 3

உன்னைப் போலே உழைப்போம்;
ஊக்கம் கொண்டு பிழைப்போம்;
பொன்னின் மிக்க எறும்பே,
போக வேண்டாம் திரும்பே. 4

# நாராயணன்

நாராயணன் ஒருவர் சொல்லையும் கேட்க மாட்டான். அவன் மிகவும் பிடிவாதக் காரன். "தூணைச் சுற்றாதே!" என்பாள் அவன் தாய். "சுற்றினால் உனக்கென்ன?" என்பான் நாராயணன். "அப்பா, மயக்கம் வரும்," என்பாள் அவன் தாய். "வந்தால் வரட்டும்!" என்று அத்தூணைச் சுற்றிக் கொண்டே இருப்பான் நாராயணன்.

அவன், தன் தந்தையின் சொல்லையும் சிறிதும் கேட்கவே மாட்டான். அதனால் அவன் தந்தை மிகவும் கோபம் கொள்ளு வார்; அவனைப் பிரம்பினாலும் அடிப்பார். அவர் என்ன செய்தும் அவன் பிடிவாதக்கார னாகவே இருந்தான்,

நாராயணன் ஒரு நாள் கோபித்துக் கொண்டு, 'நான் சாப்பிடமாட்டேன்' என்றான். அப்போது அவன் தாய் அவனை

மிகவும் வேண்டி வேண்டி அழைத்தான். அவன் தகப்பனர் அவனுக்குப் பலவித சமாதான வார்த்தைகள் சொன்னர். பிறகு கோபித்தார்; முடிவில் நன்ருக அடித்தார். அவன் அப்போதும் சாப்பிடவேயில்லை.

அவன், பள்ளியில்கூட இவ்விதம் பிடிவாதம் செய்வான். அதனல் அவன் அடிக்கடி ஆசிரியரிடம் அடிபடுவான்; அல்லது பலகையின்மேல் நின்று கொண்டு வருந்துவான்.

நாராயணன் ஒரு நாள் பள்ளிக்குச் சென்று கொண்டு இருந்தான். அப்போது அவன் காலில் ஒரு கண்ணுடித் துண்டு பொத்துக் கொண்டது. அதனல் அவன் சில நாட்கள் வருந்தினன். ஆதலால் அவன் தன் குதிகாலைத் தூக்கியே நடந்தான்.

சில நாளில் நாராயணனுக்கு அந்த நோய் நீங்கிவிட்டது. ஆனல் அவன் அப் போதும் தன் குதிகாலைத் தூக்கியபடியே நடந்தான்.

அது கண்ட அவன் தாய் "அப்பா அப்படி நடக்காதே" என்ருள்.

அதற்கு அவன், "நடந்தால் உனக்கென்ன ?" என்ருன்.

அப்போது அவள், "அப்பா நீ நொண்டியாகி விடுவாய்" என்ருள்.

அதற்கும் அவன், "ஆகில் உனக்கென்ன ?" என்ருன்.

சில மாதங்கள் சென்றன. பிறகு அவன் காலினைக் குணப்படுத்த அவன் தந்தை எவ்வளவோ முயன்ருர். அவன் கால் குணமடையவே இல்லை. முடிவில் அவன் கையில் கோல் கொண்டு நொண்டி நடக்க ஆரம்பித்தான். அன்று முதல் அவனை எல்லோரும் "நொண்டி நொண்டி" என்றே அழைக்க ஆரம்பித்தார்கள். அப்போது அவன் மிகவும் வருந்தினுன்.

நாராயணன் பெரியவனுன பிறகு அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. கலியாணம் செய்து கொள்ள ஒருவரும் பெண் கொடுக்கவில்லை. அப்போதுதான், நாராயணன் பிடிவாதத்தால் வந்த பயனை உணர்ந்தான்.